1987 மார்ச் 11]

திருச்சி—ஆவூர் நகரப் பேருந்து.

115—(*வினா எண். 10384) திரு. ஜே. முகம்மது கனி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை-விராலிமலை ஒன்றியம், திருச்சியிலிருந்து ஆவூர் வரை நகரப்பேருந்து விடப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): திருச்சி மத்திய பேருந்து நிலையத்திலிருந்து ஆவூருக்கு நகரப் பேருந்து ஒன்றை 8 நடைகள் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகம் 28—2—1986 முதல் இயக்கி வருகிறது.

திரு. ஜே. முகம்மது கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நகரப் பேருந்து விட்டதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. இந்த திருச்சி புதுக்கோட்டை சாலையிலே, மாத்தூர் முதல் ஆவூர் செல்கின்ற சாலையைச் சுற்றி பல புதிய தொழிற்சாலைகள் வருகின்ற காரணத்தினால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்தப் பகுதியிலே தார்ச் சாலையாக மாற்றித் தர முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, புதிய தொழிற்சாலைகள் வருகின்றன என்று சொன்னார்கள். இன்னும் வரவில்லை. அவை வருகிறபோது இதுவும் வரும்.

கால்நடை விரிவாக்க அலுவலர்கள்.

116—(*வினா எண். 5000) திரு. ச. வெ. வீரானம்பலம்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் (I.R.D.P.) வழங்கப்படும் கால்நடைகளுக்கு சிகிச்சைகள் செய்யவும் பின்தொடர் பணிகளுக்காகவும் (Follow up) கால்நடை விரிவாக்க அலுவலர்களுக்கு மருந்துகள் வழங்க அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?